(2) அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41 (3)ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகளின் 244-வது விதியின் கீழ் 41-வது விதி பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டுமென்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். பொன்னப்பநாடார், சுவாமிதாஸ், கே. டி. கே. தங்கமணி ஆகியோர் ஒரு அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறார்கள். முதலாவதாக திரு. ஆர் பொன்னப்ப நாடார்.

(3) கவன ஈர்ப்பு

(அ) திருவாங்கூர்—கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நடத்த இருக்கும் உண்ணு விரதம் குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of the Hon. Minister for Education and Revenue to a matter of urgent pubic importance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred graduate teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.

திரு. எ. சுவாமிதாஸ் : சென்னை உயர்நீதி மன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்து, தங்களது சட்டபூர்வமான கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென, திருவாங்கூர்-கொச்சியிலிருந்து மாற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களால் 1—4—1971 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கு முன்பாகத் தொடங்கப்படவிருக்கின்ற உண்ணுவிரதப் போராட்டம் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியத்தை மாண்புமிகு கல்வி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I wish to call the attention of the Hon. Minister to a matter of urgent public importance, namely, the proposed agitation of hunger-strike to be commenced on 1st April 1971 before the Kanyakumari Collectorate by the Travancore–Cochin transferred teachers for their legitimate demands which they have been pressing for their redressal consequent on the decision of the Honourable High Court of Judicature, Madras.